*******************************************************************

# ஈரோடு புத்தகத் திருவிழா அரங்கக் கட்டுமானப் பணிகள் இரவு பகல் தீவிரம் ... அமைச்சர் சு. முத்துசாமி , சட்டமன்ற உறுப்பினர் திருமகன் ஈவெரா நேரில் பார்வையிட்டனர்...

*******************************************************************

ஈரோடு புத்தகத் திருவிழா ஆகஸ்ட் 5 ஆம் தேதி வெள்ளிக்கிழமை மாலை 5.30 மணிக்கு ஈரோடு சிக்கய்யநாயக்கர் கல்லூரி மைதானத்தில் தொடங்குகிறது. இன்னும் 22 நாட்கள் உள்ளன. கடந்த சில நாட்களாக மைதானத்தைச் சுத்தப்படுத்துதல் சமப்படுத்துதல் பணி நடைபெற்று வந்தது.

தற்போது அரங்கங்களை எழுப்பும் கட்டுமானப் பணிகள் இரவு - பகல் தீவிரமாக பேரவை நிர்வாகிகளின் நேரடி மேற்பார்வையில் நடைபெற்று வருகிறது.

இந்நிலையில் மைதானத்தில் நடைபெற்று வரும் பணிகளை வீட்டுவசதித்துறை அமைச்சர் மாண்புமிகு சு. முத்துசாமி அவர்களும் ஈரோடு கிழக்குத் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு திருமகன் ஈவெரா அவர்களும் நேரில் வந்து பார்வையிட்டனர்.அரசியல் பிரமுகர்கள் , அதிகாரிகள் , கல்லூரி முதல்வர் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

இடையில் லேசான மழை வந்ததையும் பொருட்படுத்தாது பார்வையிட்டதோடு சில ஆலோசனைகளையும் அமைச்சர் வழங்கினார்.

பேரவைத் தலைவர் த. ஸ்டாலின் குணசேகரன் வந்திருந்த அமைச்சர் உள்ளிட்ட குழுவினருக்கு திருவிழாத் தயாரிப்புகள் குறித்து விளக்கினார்.

















